கருக்கம்

ஈரோடு மாநகராட்சி – பாதாள சாக்கடைத் திட்டம் – கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதற்கு அணுகு சாலை அமைக்க ஈரோடு வட்டம் 39 பீளமேடு கிராமத்தில் 18.27 ஏக்கர் நிலங்களை நேரடி பேச்சுவார்த்தை மூலம் நிலக்கிரையம் செய்ய ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை

அரசாணை (நிலை) எண்:104 நாள்: 04.08.2011

திருவள்ளுவராண்டு –2042
ஆடித் திங்கள் 19 –ம் நாள்

படிக்கப்பட்டது:

1) அரசாணை (2ப) எண்.39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.7.6.2010
2) மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.61583/08/ஆ1, நாள்.12.11.2010

------

ஆணை:

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஈரோடு வட்டம், பீளமேடு கிராமத்தில் 18.27 ஏக்கர் நிலம் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் ஈரோடு மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.1,33,37,636/– செலுத்தி வாங்கிக் கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்கள் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஈரோடு வட்டம், பீளமேடு கிராமத்தில் சர்வே எண்கள்.84/1,2,3,4,5,7, 85/1,2,3,4,6,7,8, 86/6, 87/2பி, 88/2,3,4 90/2, 61/2, 62/2 (ம) 3–ல் 18.27 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் தேர்வு செய்யப்பட்டு, நில உரிமையாளர்களின் சம்மதத்தின் பேரில் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் மாவட்ட அளவிலான குழு நில மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,37,500/–ஐ நிர்ணயம் செய்யப்பட்டது என்றும் நிர்ணயம் செய்யப்பட்ட நில மதிப்புத் தொகை மாவட்ட அளவிலான குழுவின் வரம்பிற்கு மேல் உள்ளதால், மாநில அளவிலான குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது எனவும், மேற்படி 18.27 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை வாங்குவதற்கு மாவட்ட அளவிலான பேச்சுவார்த்தைக்கு நிர்ணயம் செய்த நிலமதிப்பு தொகையினையே, மாநில அளவிலான குழு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,37,500/–ஐ பரிந்துரை செய்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் தற்பொழுது ஈரோடு மாநகராட்சி பகுதியில், பாதாள சாக்கடை குழாய் பதிக்கும் திட்டப்பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது என்றும், ஈரோடு நகரைச் சுற்றியுள்ள நிலங்களின் மதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், மேற்கண்ட நிலங்களுக்குப் பதிலாக வேறு நிலங்கள் தெரிவு செய்வது இயலாது என்பதாலும், நில உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்து 6 மாதங்களுக்கு மேல் ஆகி இருப்பதால் நிர்ணயம் செய்யப்பட்ட நில மதிப்பைவிட கூடுதல் நில மதிப்பு கோர வாய்ப்புள்ளதாலும், மாநில

த.பி.பா.

அளவிலான நேரடி பேச்சுவார்த்தைக்குழு பரிந்துரை செய்த நில மதிப்பிற்கு ஈரோடு மாநகராட்சி, மேற்படி நிலத்தைக் கிரையம் பெற்றுக் கொள்ள தக்க அரசாணை விரைவில் வழங்குமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் கோரிக்கையினை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று, ஈரோடு மாவட்டம், பீளமேடு கிராமத்தில் சர்வே எண்கள். 84/1,2,3,4,5,7, 85/1,2,3,4,6,7,8, 86/6, 87/2பி, 88/2,3,4 90/2, 61/2, 62/2 (ம) 3-ல் உள்ள18.27 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தினை ஈரோடு மாநகராட்சிக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதற்கு அணுகு சாலை அமைக்க, ஈரோடு மாநகராட்சி பொது நிதியிலிருந்து, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.6,37,500/- வீதம் மொத்தம் ரூ.1,33,37,636/- செலுத்தி நேரடி பேச்சுவார்த்தை மூலம் நிலக்கிரையம் செய்து கொள்ள ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை முறையே நிதித்துறையின் அசா.கு.எண்.5934/நிதி (நநிமகுவ)/2011, நாள்.23.2.2011 மற்றும் வருவாய்த்துறையின் அ.சா.கு.எண்.10232/நிநி2/2011-1, நாள்.15.3.2011-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கருத்தையா பாண்டியன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம், ஈரோடு
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-600 005.
ஆணையர், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு.

நகல்
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் (ம) ஊரக வளர்ச்சி) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
செயலரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை-600 009.
இ.கோ/உ.நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

4/5/11
பிரிவு அலுவலர்.